தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ஏ. சோமசுந்தரம் Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 5-4-2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பேரிடர் மேலாண்மை ஒத்திகை

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் மற்றும் அரக்கோணத்தில் உள்ள 4வது பட்டாள தேசிய பேரிடர் வள படை சார்பில் இன்று (05.04.2019) பேரிடர் மேலாண்மை ஒத்திகையானது தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்றது.

அரக்கோணத்தில் உள்ள 4வது பட்டாள தேசிய பேரிடர் வள படையின் உயர் தளபதியான செல்வி. ரேகா நம்பியார் அவர்கள் நிலநடுக்கம் ஏற்படும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினார்.

துணைத்தளபதி திரு. ராஜன் பாலு அவர்கள் இயற்கை சீற்றங்களான நிலநடுக்கம் மற்றும் வெள்ளம் ஏற்படும்போது நம்மை எவ்வாறு பாதுகாத்துக்கொள்ள வேண்டும் என்பதையும் மற்றும் முதலுதவி அளிப்பது பற்றியும் விரிவாக எடுத்துரைத்தது மட்டுமின்றி அவரது குழுவினருடன் செயல்முறைப் படுத்தியும் காண்பித்தார்.

அதிவிரைவு படை, தமிழ்நாடு சிறப்புப்படை, மத்திய பாதுகாப்புக் காவல் படை, தமிழ்நாடு தீயணைப்புத் துறை, உள்நாட்டுக் காவல் படை, தமிழ்நாடு வனத்துறை மற்றும் செஞ்சிலுவை சங்கம் ஆகியோரை இணைத்து அரக்கோணத்தில் உள்ள 4வது பட்டாள தேசிய பேரிடர் வள படையினர் சுமார் 150 நபர்களுடன் நேரடியாக மாதிரி நிலநடுக்க ஒத்திகையினை செயல்விளக்கம் செய்து காண்பித்தார்கள்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக தேசிய மாணவர் படை மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட மாணவர்களும் மாதிரி ஒத்திகையில் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர் நீ. குமார், பதிவாளர் முனைவர் அ.சு. கிருஷ்ணமூர்த்தி, முதன்மையர் (வேளாண்மை) முனைவர் ம. கல்யாணசுந்தரம், முதன்மையர் (மாணவர் நலன்) முனைவர். தி. ரகுசந்தர், பல்கலைக்கழக அதிகாரிகள், ஆசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் சுமார் 700 மாணவர்களும் இந்த மாதிரி ஒத்திகை செயல் விளக்கங்களில் கலந்து கொண்டனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்